[திரு. வேடச்சந்தூர் வி. பி. பாலசுபிப்ரமணியன்] [1982 மார்ச் 30

(முற்பகல் 10—20)

ஆகவே இந்த அரசும் நோய் தடுப்பு நடவடிக்கைகள் எடுக்கின்றபோது நம்முடைய மாநில அதிகாரிகள், ஏற்பட்டிருக்கின்ற சேதங்கள் எவ்வளவு, அதனால் விவசாயிகளுக்கு எவ்வளவு பாதிப்பு ஏற்பட்டிருக்கின்றது என்ற விவரங்களை எடுத்து மத்திய அரசுக்கு அனுப்பி, பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நஷ்ட ஈடு கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, பயிர்பாதுகாப்பு இன்சூரன்ஸ் திட்டம் அந்த அடிப்படையிலே தான் செய்யப்படுகிறது. ஆனால் அதை இந்தத் துறை நேரடியாகக் கவனிக்காத காரணத்தினால், கூட்டுறவுத் துறையோடு இதுபற்றிக் கலந்து முடிவு செய்யும்.

6. அறிக்கை அளித்தல்.

பொதுக்கணக்குக் குழு

திரு. எஸ். என். வி. சித்தன் : மாண்புமிக்க பேரவைத் தலைவர் அவர்களே, 1976–77-ஆம் ஆண்டிற்கான வாக்களிக்கப் பெற்ற மானியங்களிலும் சாட்டப்பெற்ற நிதி ஒதுக்கீடுகளிலும் மிகையாகச் செலவழித்த தொகை பற்றிய பொதுக் கணக்குக் குழுவின் 11-வது அறிக்கையை (ஏழாவது சட்டமன்றப் பேரவை) பேரவைக்கு அளிக்கிறேன்.

6. அரசினர் சட்ட முன் வடிவுகள்

(அ) இந்தியக் கூட்டாண்மை (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு, 1982.

மாண்புமிகு திரு. எஸ் திருநாவுக்கரசு : தலைவர் அவர்களே, 1982-ஆம் ஆண்டு இந்தியக் கூட்டண்ாமை (தமிழ்நாடு திருத்த) சட்டமுன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு எஸ். திருநாவுக்கரசு : தலைவர் அவர்களே, இச்சட்ட முன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

(ஆ) நிதி ஒதுக்க (எண். 2) சட்டமுன் வடிவு 1982.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''தமிழ்நாடு 1982-ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண். 2) சட்ட முன்வடிவு *(சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 26/1982) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெறவேண்டும்''.

திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிக்க பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1982-ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண்.2) சட்ட முன்வடிவின் மீது இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பிலே ஒரு சில கருத்துக்களை இந்த மாமன்றத்தின் முன் வைக்க விரும்புகிறேன்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை.)

இன்றைக்கு தமிழகத்தை எதிர்நோக்கி இருக்கின்ற மிக முக்கிய பிரச்சினைகளிலே ஒன்று கடுமையான மின்சாரத் தட்டுப்பாடு. தமிழகத்திலே இன்று நிலவி வருகிற மின்சாரத் தட்டுப்பாடு பற்றி பல்வேறு சமயங்களிலே இந்த மன்றத்திலே கவலைக் குறைகள் எழுப்பப்பட்டிருக்கின்றன. ஆனாலும் கூட, என்ன காரணத்தாலோ திடீர் திடீரென்று மின்சாரம் அணைக்கப்படு கின்ற நிலை தமிழகத்திலே பல்வேறு இடங்களிலே நிகழ்ந்து கொண்டே இருக்கின்றது. நான், மாண்புமிக்க மாற்றுத் தலைவர் அவர்களே, உங்கள் மூலமாக ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். சில நாட்களுக்கு முன்னாலே இந்த மன்றத்திலே நான் பேசுகின்ற நேரத்திலே இந்த வரிசையிலே இருந்த விளக்குகள் கொஞ்ச நேரம் எரியாமல் இருந்தது. அதைக் கூட நம்மாலே பொறுத்துக்கொள்ள முடியாமல், இந்த மன்றத்திலே கொஞ்சநேரம் விளக்குகள் எரியாமல் இருந்ததற்காக குரல் எழுப்பப்பட்டது. நான் உங்கள் மூலமாகக் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன், கொஞ்ச நேரம் இந்த மன்றத்திலே சில விளக்குகள் எரியாததற்கே நம்மாலே பொறுத்துக் கொள்ள முடியவில்லை என்று சொன்னால், தமிழகத்திலே பல்வேறு நாட்களாகவே விவசாயத்தை, தொழிலை, இல்லங்களை, தொழில் நிறுவனங்களைப் பாதிக்கின்ற அளவுக்கு மிகக் கடுமையான மின்சாரப் பஞ்சம் ஏற்பட்டுக் கொண்டிருப்பதை அரசு தவிர்க்கவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். கூட்டியிலே இருந்தால்தான் அகப்பையிலே வரும்—நமக்கும் தெரியும். ஆனாலும் கூட என்ன

*1982 மார்ச் 29-ம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.